**செய்தி வெளியீடு எண்: 934** **நாள்: 18.12.2018**

## செய்திவெளியீடு

1) மனநோயால் பாதிக்கப்பட்டவர் அல்லது முன்புபாதிக்கப்பட்டவர்
2)மன நலம் பாதிக்கப்பட்ட நபர்களை பராமரிப்பவர்கள்அல்லதுபராமரிக்கும் நபர்களுக்காக நடத்தப்படும் நிறுவனங்கள்
3)மனநல பணியில் ஈடுபட்டுள்ளதொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளிடமிருந்து

மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பிரிவிலும் தலா இரண்டு நபர்கள் மனநல சேவைசட்டம் 2017ன் கீழ் தமிழ்நாடு மனநல ஆணையத்தின் அலுவல்சாரா உறுப்பினர்களாக (Ex-officio Members) நியமனம் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இது முற்றிலும் கௌரவ பொறுப்பாகும். காலாண்டு கூட்டங்களில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு விதிகளின் படி பயணப்படியும் தினப்படியும் வழங்கப்படும். விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் www.tnhealth.org என்ற இணையதள முகவரியில் தகுதிகள், விண்ணப்பபடிவம், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பற்றி தெரிந்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தகுந்த சான்றிதழ் / ஆவணங்களுடன் தபால் / விரைவு தபால் / நேரிலும் முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில மனநல ஆணையம், அரசு மனநல காப்பக வளாகம், மேடவாக்கம் குளச்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை–10 என்ற முகவரிக்கு அனுப்பலாம். மேலும் விபரங்களுக்கு அலுவல்நேரங்களில் தொலைபேசி எண். 044–26420985 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வருகிற 30.12.2018ஆம் தேதி மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**